

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2025) காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெறும் பகுதியில், ஒக்கியம் மடுவு கால்வாயில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக கரைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதையும், நீர் தடை இன்றி செல்வதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எல்லைப் போராட்டத் தியாகிகள் தினம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, நவ. 3 -**

**எல்லைப் போராட்டத் தியாகிகள் தினத்தையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இன்று நாம் வாழும் தமிழ்நாட்டின் பல பகுதிகளை நமக்காகப் போராடிப் பெற்றுத் தந்த குமரித் தந்தை மார்ஷல் நேசமணி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., முதலிய எண்ணற்ற போராளிகளுக்கு எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளில் என் வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

போராடாவிட்டால் நமக்குச் சொந்தமான நிலம் மட்டுமல்ல, வாக்குரிமையே கூட பறிபோய்விடும் என அப்போதே காட்டிச் சென்றுள்ள நம் தலைவர்கள் வழியில் தமிழ்நாட்டின் உரிமைகளைக் காப்போம்!

தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

### ‘தாட்கோ’ சார்பில் — ரூ.75 லட்சம் மதிப்பீட்டில்

# கண்ணகி நகரில் - கபடி உள் விளையாட்டு அரங்கப் பணிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

**சென்னை, நவ. 3 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1.11.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நீர்வளத் துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தாட்கோ திட்டத்துறை களின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

முதலாவதாக காரப்பாக்கத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டுமான பணிகள் நடைபெறும் பகுதியில், ஒக்கியம் மடுவு கால்வாயில் நீர்வளத்துறையின் சார்பில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக மடுவின் கரைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளதையும், நீர் தடை இன்றி செல்வதையும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ராஜீவ் காந்தி நெடுஞ்சாலை அருகே ஒக்கியம் மடுவின் கீழ் பகுதியில், மடுவில் மேற்கொண்ட தூர் வாரும் பணிகள் மற்றும் வலது கரை சீரமைப்பு பணிகளால் நீர் தடையின்றி செல்வதையும், ஒக்கியம் மடுவின் மேல்பகுதியில் உள்ள தனியார் கல்லூரி பகுதியில் பணிகள் நடைபெற்று வருவதையும், நீர் தடையின்றி செல்வதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கண்ணகி நகர் பகுதியில் நீர்வளத்துறையின் சார்பில் 27.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் ஒரு பகுதியாக ஒக்கியம் மடுவின் இடது புறத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் இயந்திரங்களின் உதவியுடன் விரைவாக நடைபெற்று வருவதையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பில் கண்ணகி நகரில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில், கண்ணகி நகர் பகுதியில் கபடி விளையாட்டு போட்டியில் ஆர்வம் உள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் 75.00 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பார்வையாளர் மாடம், உடற்பயிற்சி கூடம், பயிற்சியாளர் அறை, ஒப்பனை அறை மற்றும் செயற்கை தளத்துடன் கூடிய இரண்டு ஆடுகளங்கள் உள்ளடக்கிய கபடி உள்விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கப்பதக்கம் வென்ற கபடி வீராங்கனை செல்வி கார்த்திகா ரமேஷ் மற்றும் பயிற்சியாளர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டார்.

நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதியில் இருந்து வெள்ளநீரை பக்கிங்காம் கால்வாய் வழியாக கடலுக்கு கொண்டு சேர்க்கும் வகையில், செம்மொழி சாலை எல்காட் பகுதியில் இருந்து 42.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.700 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டு வரும் இரண்டு கண்கள் கொண்ட பெரிய அளவிலான வெள்ள நீர் கடத்தி மூடு கால்வாய் அமைக்கும் பணியின் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் சோழிங்கநல்லூர் பகுதியில் சதுப்பு நிலத்தில் நீர் எளிதாக செல்லவதற்காக, மேடவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரை இணைக்கின்ற வகையில் எல்காட் பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் புதிதாக கட்டப் பட்டுள்ள உயர்மட்ட பால த்தை பார்வையிட்டதுடன், மழைக் காலத்தில் வெள்ள நீர் தடையின்றி எளிதில் செல்லும் வகையில் பழைய பாலத்தை இடிக்கும் பணிகளை பார்வையிட்டு, விரைவாக இடித்து அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும், சீரமைக்கவும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்களை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருப ரன்,நீர்வளத்துறை செயற்பொறியாளர் இரா. அருண்மொழி, கண்ணகி நகரைச் சேர்ந்த தங்கப்பதக்கம் வென்ற கபடி வீராங்கனை செல்வி கார்த்திகா ரமேஷ், துணை ஆணையர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெடுஞ்சாலைத் துறை சார்பில்

# ரூ.1248.24 கோடியில் 10 சாலைகள் - 2 சாலை மேம்பாலங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 3 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ஈரோடு, திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவள்ளூர், திருநெல்வேலி, அரியலூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் 1177 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணிகள் மற்றும் வேலூர் மாவட்டத்தில் 71 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் இரயில்வே கடவுகளுக்கு மாற்றாக கட்டப்பட்டுள்ள இரண்டு சாலை மேம்பாலங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.**

ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு சாலை உட்கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாடு அரசு தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கிடும் வகையில், நெடுஞ்சாலைத் துறை வாயிலாக மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல், மேம்பாடு செய்தல், புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

கட்டி முடிக்கப்பட்டுள்ள 10 சாலைப் பணிகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை திறந்து வைத்தல்

ஈரோடு மாவட்டத்தில் 272 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் (மாநில நெடுஞ் சாலை எண் 15) (கி.மீ 123153/6) 30.60 கி.மீ நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்ட கோபி ஈரோடு சாலை;

மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் 221 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ் சாலை 231) (கி.மீ 4/520/925) 16.425 கி.மீ நீளத்திற்கு தரம் உயர்த்தப்பட்ட மயிலாடுதுறை – திருவாரூர் சாலை;

தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 197 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 10 மீ அகல இருவழிச்சாலையாக (மாநில நெடுஞ்சாலை –66) (கி.மீ. 3/68/6) 5.0 கி.மீ நீளத்திற்கும் மற்றும் (கி.மீ 13/9கி.மீ 23/8) 9.90 கி.மீ நீளத்திற்கும் தரம் உயர்த்தப்பட்ட கும்பகோணம் மன்னார்குடி சாலை;

திருவள்ளூர் மாவட்டத்தில் 111 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 7/018/4) 11.40 கி.மீ நீளத்திற்கு இரு வழிப்பாதையிலிருந்து நான்கு வழிப்பாதையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட கொரட்டூர் தின்னனூர் பெரியபாளையம் சாலை மற்றும் 82 கோடி ரூபாய் செலவில் (கி.மீ.7/016/2) 9.20 கி.மீ நீளத்திற்கு இரு வழிச் சாலையிலிருந்து நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட திருவள்ளூர் அரக்கோணம் சாலை;

திருநெல்வேலி மாவட்டத்தில் 65 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் (கி.மீ 0/06/049) 6.049 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை;

முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் 60 கோடி ரூபாய் செலவில் (கி.மீ 6/814/8) 8.0 கி.மீ நீளத்திற்கும், 62 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 14/8 21/0) 6.20 கி.மீ நீளத்திற்கும் மற்றும் 63 கோடி ரூபாய் செலவில் (கி.மீ. 21/027/6)6.60 கி.மீ நீளத்திற்கும் (மாநில நெடுஞ்சாலை140) இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட விருத்தாசலம் ஜெயங்கொண்டம் மதனத்தூர் சாலை;

மதுரை மாவட்டத்தில் 41 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பரங்குன்றம், மதுரை திருமங்கலம் சாலைப்பகுதி (மாநில நெடுஞ்சாலை நகர்பகுதி எண்.101); கி.மீ.2/550 3/750ல் வலதுபுறத்தில் உள்ள தென்கால் கண்மாய் கரைவழியாக 1.20 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்பட்ட இருவழிச்சாலை;

வேலூர் மாவட்டத்தில் 35 கோடியே 99 இலட்சம் ரூபாய் செலவில் கூடநகரம் அனங்காநல்லூர் சாலையில் கி.மீ 3/0ல் இரயில்வே கி.மீ. 160/24ல் உள்ள கடவு எண்.67க்கு மாற்றாக மேலாலத்தூர் வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

லட்சுமி அம்மாள்புரம் நாவிதம்பட்டி சாலையில் கி.மீ 0/2ல் இரயில்வே கி.மீ. 168/1214ல் உள்ள கடவு எண்.72க்கு மாற்றாக மேல்பட்டி வளத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையே 35 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலம்;

என மொத்தம் 1248 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 சாலைகள் மற்றும் இரு சாலை மேம்பாலங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத்திட்டம், திட்டம்II மற்றும் சென்னை கன்னியாகுமரி தொழில்தடத் திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன் நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கே.ஜி. சத்தியபிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்திற்கு வருகை தரும்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி அறிக்கை!



*தருமபுரி, நவ. 3 -*

*தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணியின் மகன் ஏ.எம்.பிரகதீஸ்வரன்ஜி. மதுபிரதிக்ஷா ஆகியோரது திருமணம் தருமபுரி ஜோதி மகாலில் இன்று( நவ 3) நடைபெறுகிறது. இத்திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைக்க திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தனி விமானத்தில் புறப்பட்டு காலை 9 மணிக்கு சேலம் விமான நிலையம் வந்தடைகிறார். பின்னர் சாலை மார்கமாக தருமபுரிக்கு வருகை தரும் அவர் திருமணவிழாவில் பங்கேற்று மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்குகிறார்.*


*தமிழ்நாடு முதலமைச்சரின் தருமபுரி வருகையை ஒட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மகேஸ்வரன் தலைமையில் பாதுகாப்பு பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.*

*இது குறித்து தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ. மணி எம்.பி விடுத்துள்ள அறிக்கையில் எனது மகன் திருமணத்தில் கலந்து கொள்ள தருமபுரி வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகதலைவர் அவர்களை சிறப்பான முறையில் வர வேற்றிட கழக முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழகத்தினர், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழகத்தினர், கழக முன்னோடிகள் என அனைவரும் திரளாக பங்கேற்க வேண்டும் என்று தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆ.மணி எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.*

### அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

# நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!



*நாகை, நவ. 3 -*

*இது குறித்து நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*நாகை மாவட்ட தி.மு.க.சார்பில் நாகை மாவட்டத்திலுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ.) ஆலோசனை கூட்டம் இன்று 3.11.2025 காலை 11.30 மணிக்கு நாகையில் மாவட்ட திமுக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்தில் மண்டல பொறுப்பாளரும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். கூட்டத்தில் நாகை, கீழ்வேளூர், வேதாரணியம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின்*

*பர்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள்,*

*1. என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி,*

*2 எஸ்.ஐ.ஆர்.(சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சிராய்வு) குறித்து,*

*3. கழக ஆக்கப்பணிகள்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*




கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியில், நவம்பர் 1 உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு, கிராம சபைக் கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் பேசினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் மகாதேவன், ஒன்றிய செயலாளர் அறிஞர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், குஞ்சப்பனை ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு ஊராட்சியில் நடைபெற்ற மற்றும் நடைபெறவிருக்கும் பணிகளை கூறி பொதுமக்களிடம் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொறுப்பாளர்.கே. எம். ராஜு, அவைத் தலைவர் போஜன், நகர மன்ற தலைவர் ஜெயக்குமாரி, ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், ஒன்றிய செயலாளர் பீமன் உட்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.